TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8074793

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District மாவட்டம்: நாகப்பட்டினம் PS காவல்நிலையம்: ஊ.த.ம.க பிரிவு. Year ஆண்டு: 2021 FIR No. மு.த.அ. எண்: 08/2021 Date நாள்: 03.09.2021

2. (i) Act சட்டம்: IPC, Sections பிரிவுகள்: 167, 409, 465, 468,
(ii) Act சட்டம்: PC Act ~~[illegible]~~ 2018. Sections பிரிவுகள்: 471, r/w 109 IPC. and
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்: u/s 13(2) r/w 13(1)(a) PC (Amendment) Act, 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 2018 ம் ஆண்டு முதல் — Date to : நாள் வரை 2019-ம் ஆண்டுவரை.
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 03.09.2021 Time : நேரம் 14.00 Hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 03.09.2021 Time : நேரம் 14.00 Hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கண்காணிப்பு அறிக்கையின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 15 கி.மீ வடமேற்கு, வெங்கிடங்கால் [illegible]
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address முகவரி: கீழ். கொட்டாரக்குடி ஊராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் ம. அகோரப்பிரியா — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் மு. மணியப்பன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1981 — (d) Nationality : நாட்டினம் இந்தியர் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் காவல் ஆய்வாளர் — (g) Address முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாகப்பட்டினம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்). T. ஜெயச்சந்திரன், முன்னாள் இளநிலை பொறியாளர், திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம். 2. S. செந்தில் முன்னாள் உதவி செயற்பொறியாளர், மயிலாடுதுறை உபகோட்டம், நாகப்பட்டினம் மாவட்டம் 3. K. அன்பரசி, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (B.P) திருமருகல் ஊராட்சி ஒன்றியம், நாகப்பட்டினம் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

பணிந்து சமர்பிக்கப்படுகிறது

நாகப்பட்டினம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 03.09.2021 ஆம் தேதி 14.00 மணிக்கு, 2018-2019 ஆம் ஆண்டு நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தான்குடியில் நடைபெற்ற தார் சாலையை பழுதுநீக்கும் பணியில் உள்ள முறைகேடுகள் தொடர்பாக இரகசிய விசாரணை செய்து, சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்திற்கு கண்காணிப்பு அறிக்கை அனுப்பியதன் அடிப்படையில், எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்களின் மீது வழக்கு பதிவு செய்ய வழங்கப்பட்ட G.O.(3D) No.19 Rural Development and Panchayat Raj (E2) Department. Dated : 06.07.2021 ல் கண்ட ச/பி 17A of Prevention of Corruption (Amendment) Act, 2018 –ன்படியான ஒப்புதல் ஆணை மற்றும் சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக குறிப்பாணை எண் VR.No.43112/2020/RDP/NP நாள் 26.07.2021 இல் அளிக்கப்பட்டுள்ள வழிக்காட்டுதல் மற்றும் அறிவுரைகளின் பேரில் எதிரிகள் 1 முதல் 4 வரையுள்ளவர்களின் மீது வழக்கு பதிவு செய்த விபரம் பின்வருமாறு (தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம் 3/9/21

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் M. அருள் பிரியா. காவல் ஆய்வாளர்
Rank: நிலை ........................ No. எண் ........
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு.

**எதிரி-1** திரு.**T.**ரவிச்சந்திரன், இளநிலை பொறியாளர், கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர், திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக 30.07.2016 -ந்தேதி முதல் 08.03.2019 -ந்தேதிவரை பணிபுரிந்து, தற்போது 07.05.2020 -ந்தேதி முதல் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்துவருகிறார்.

**எதிரி-2** திரு.**S.**செழியன், 31.12.2018-ந்தேதி முற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக பணிஓய்வில் சென்றுள்ளவர், நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை உபகோட்டம், உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சியாக 19.03.2018 -ந்தேதி முதல் 31.12.2018 –ந்தேதிவரை பணிபுரிந்துள்ளார்.

**எதிரி-3** திரு.**K.**அன்பரசு, வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி), திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகம், நாகப்பட்டினம் மாவட்டம் என்பவர் திருமருகல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) யாக 11.03.2019 -ந்தேதி முதல் 18.09.2019 –ந்தேதி வரை பணிபுரிந்து, தற்போது 09.08.2021 –ந்தேதி முதல் கொள்ளிடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) ஆக பணிபுரிந்து வருகிறார்.

**எதிரி-4** திருமதி.**T.**ரஜி, ஒப்பந்தக்காரர், க/பெ.தம்பையா, எண்:1, மாடன் நகர், கோவில்பாலையம், மன்னார்குடி என்பவர், திருமருகல் ஒன்றியத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர். இவர் தனிநபர் (Private Individual/Registered Contractor).

சென்னை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் எண்.112116/2017/NEDM-3, நாள் 13.03.2018–ல் கண்ட ஆணையின்படி, நாகப்பட்டினம், மாவட்ட ஆட்சித்தலைவர் / தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்:713/சி8/2018, நாள் :12.04.2018-ல் கண்ட செயல்முறைகளின்படி 2017 ஆம் ஆண்டு வெள்ள நிவாரணப்பணிகள் தற்காலிக புணரமைப்பு செய்தல் (Temporary Restoration) திட்டத்தின்கீழ் நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, திருமருகல் ஒன்றியம், கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி தார்சாலையை பழுது நீக்கும் பணி நடைபெற்று முடிந்த காலத்தில் பணிபுரிந்த எதிரிகள் 1 முதல் 3 வரை உள்ளவர்கள், ஊழல் தடுப்பு சட்டம், 1988 மற்றும் ஊழல் தடுப்புச் (Amendment) சட்டம் 2018 ஆகியவற்றின் சட்ட பிரிவு 2(c) -இன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வி.செந்தமிழ்ச்செல்வன் அவர்களால் நக.எண்:1417/2018/அ2 நாள்:19.04.2018-ன்படி குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பின்படி பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்தக்காரர் திருமதி.T.ரஜி, க/பெ.தம்பையா, எண்:1, மாடன் நகர், கோவில்பாலையம், மன்னார்குடி என்பவருக்கு திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலர்(வ.ஊ), திரு.வி.செந்தமிழ்ச்செல்வன் அவர்களின் செயலாணைகள் ந.க.எண்:1417/2018/அ2, நாள் 26.04.2018-ன்படி வேலை உத்தரவு (Work Order) வழங்கப்பட்டுள்ளது. கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தான்குடி சாலையில் 0.564 கி.மீ பழுதுநீக்கம் செய்ய வேண்டிய பணிக்கான மதிப்பிட்டு தொகை ரூ.4.91 இலட்சம், வேலை முடிக்கப்பட வேண்டிய நாள்-30 நாட்கள் என குறிப்பிட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

நாகப்பட்டினம் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி தார்சாலையை பழுது நீக்கும் பணியை ஒப்பந்தகாரர் திருமதி.T.ரஜி அவர்களின் சாலை பழுது நீக்கும் பணிகள் தொடர்பான அளவீடுகளை திருமருகல் ஒன்றிய அலுவலக, இளநிலை பொறியாளர் திரு.T.ரவிச்சந்திரன் அவர்கள் நேரில் ஆய்வு செய்து நடைபெற்ற வேலைகள் குறித்து M.Book -ல் பதிவு செய்துள்ளார். மேற்படி வேலை நடைபெற்ற கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி சாலை பழுது நீக்கம் பணி தொடர்பாக இளநிலை பொறியாளர் திரு.T.ரவிச்சந்திரன் அவர்கள் M.Book-ல் பதிவு செய்துள்ள விபரங்கள் குறித்து, மயிலாடுதுறை உட்கோட்டம், உதவி செயற்பொறியாளர் திரு.S.செழியன் அவர்கள் நேரடியாக மேலாய்வு செய்து மேற்படி வேலைகள் குறித்தும், அதற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்களின் விபரங்கள் மற்றும் அளவீடுகள் குறித்தும், பணிமுடிவுற்ற பிறகு ஒப்பந்தகாரருக்கு கொடுக்கவேண்டிய தொகை விபரம் ஆகியவற்றை M.Book-ல் எழுதி கையொப்பம் செய்துள்ளார்.

மேற்படி கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி சாலை பழுது நீக்கம் பணி தொடர்பாக இளநிலை பொறியாளர் திரு.T.ரவிச்சந்திரன் அவர்கள் 29.12.2018, 03.12.2018, 07.12.2018, 12.12.2018, 17.12.2018, ஆகிய தேதிகளில் மேற்படி பணியை நேரில் ஆய்வு செய்து M.book-இல் பதிவு செய்துள்ளார். அதே பணியை உதவி செயற்பொறியாளர் திரு.S.செழியன் அவர்கள் 30.11.2018, 08.12.2018, 13.12.2018, 18.12.2018, 20.12.2018 ஆகிய தேதிகளில் மேலாய்வு செய்து M.book-இல் கையொப்பம் செய்துள்ளார்.

எதிரிகள் -1 மற்றும் -2 ஆகியோர், கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி தார்சாலை பழுது நீக்கும் பணிகள் அனைத்தும் முடிவடைந்ததும், மேற்படி பணி தொடர்பான அனைத்து விபரங்களையும் M.Book-இல் பதிவு செய்து திருமருகல் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் ஒப்படைத்த பின்பு, அப்போது வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) -ஆக இருந்த எதிரி -3 திரு.க.அன்பரசு அவர்கள் மேற்படி கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி தார்சாலை பழுது நீக்கும் பணியை மேற்பார்வையிட்டு எதிரி -4 ஒப்பந்தகாரர் திருமதி.T.ரஜி அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தொகைக்கான காசோலை எண்:020241 நாள்:26.07.2019-ன்படி ரூபாய் 4,90,950/- ல் ரூபாய் 34,015/-ஐ பிடித்தம் போக ரூபாய் 4,56,935/-க்கான காசோலையை வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) திரு.க.அன்பரசு அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி தார் சாலையை தற்காலிக புணரமைப்பு செய்தல் **(Temporary Restoration)** பணிக்கான வேலையானது, வேலைக்கான மதிப்பீடு மற்றும் ஒப்பந்தத்தின்படி சரியாக நடைபெறவில்லை. மேற்படி தார்சாலை ஆரம்பிக்கப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 25 மீட்டர் நீளத்திற்கு மட்டும் தார்சாலை போடப்பட்டுள்ளது. எதிரி -4 ஒப்பந்தகாரர் திருமதி.T.ரஜி என்பவர் கொட்டாரக்குடி ஊராட்சி, பெருஞ்சாத்தாங்குடி தார்சாலை புணரமைப்பு பணியை வேலைக்கான மதிப்பீடு மற்றும் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டவாறு முழுமையாக 0.564 கி.மீ தூரத்திற்கு செய்யாமல் சுமார் 25 மீட்டர் நீளத்திற்கு மட்டும் தார்சாலை போட்டுவிட்டு, சாலை பழுது நீக்கும் பணி முழுவதும் முடித்துவிட்டதாக எதிரிகள் 1 முதல் 3 வரையிலானவர்களுடன் சேர்ந்து ஒருவருக்கொருவர் குற்ற உடந்தையாக இருந்து பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் சாலை பழுது நீக்கும் பணிக்காக அரசால் ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபாய் 4,90,950/-யை முறைகேடாக எதிரி 4 பெறுவதற்கு உடந்தையாக இருந்து அரசுக்கு இழப்பு ஏற்படுத்தியுள்ளார்.

மேலும் எதிரிகள் 1. இளநிலை பொறியாளர் திரு.T.ரவிச்சந்திரன், -2 உதவி செயற்பொறியாளர் திரு.S.செழியன் மற்றும் -3 வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), திரு.க.அன்பரசு ஆகியோர் தங்களது அரசு பணியை நேர்மையற்ற முறையில், மோசடியாக தெரிந்தே அரசு ஆவணங்களில் பொய்யான விபரங்களை சேர்த்து எதிரி -4 ஒப்பந்தகாரர் திருமதி.T.ரஜி அவர்களுடன் சேர்ந்து குற்றமுறு நோக்கத்துடன் ஒருவருக்கொருவர் குற்றச்செய்கைக்கு உடந்தையாக இருந்து தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அரசு பணம் சம்மந்தப்பட்ட வேலையினை நேர்மையற்றமுறையில் ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தெரிந்தே மோசடியாக பொய்யாக ஆவணங்களை தயார்செய்தும், பொய்யான ஆவணங்கள்

என்று தெரிந்தே அதனை உண்மையான ஆவணமாக பயன்படுத்தி, அந்த பொய்யான ஆவணங்கள் மூலம் முறைகேடு செய்து அரசுக்கு சுமார் ரூபாய் 4,90,950/- அளவிற்கு இழப்பீடு ஏற்படுத்தியுள்ளார்கள்.

எனவே மேற்கண்ட எதிரிகள் 1 முதல் 4 வரையிலானவர்களின்மீது நாகப்பட்டினம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 08/2021 சட்ட பிரிவுகள் 167, 409, 465, 468, 471 r/w 109 IPC , u/s 13(2) r/w 13(1)(a) Prevention of Corruption (Amendment) Act, 2018 -ன்படி 03.09.2021 ஆம் தேதி 14.00 மணிக்கு வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

(ம.அருள்பிரியா) 3/9/21
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலினை, தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் / சிறப்பு நீதிபதி, நாகப்பட்டினம் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

(ம.அருள்பிரியா) 3/9/21
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாகப்பட்டினம்.